**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 231/2024 ஜெயபாலன்(பிசா1) தேதி: 09.06.2026.**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி, நான் இன்று எங்கள் தரப்பில் சங்க துனை விதிகள் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ.20**. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணத்தை ஏற்றுக்கொண்டு வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை:**

(5, 13, 18, 20, 22, 24, 29, 42, 45, 55, 59, 63, 11, 27, 29, 31, 3, 37, 44, 51, 53, 62, 65, 9, 10, 19, 25, 26, 30, 35, 48, 50, 52, 54, 60, 12 14, 15, 17, 21, 28, 33, 34, 46, 47, 56, 61, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகி மேற்படி சாட்சியை பொறுத்து தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்து அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணை:** (வாதிகள் தரப்பில்)

நான் தற்போது தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.20 துனை விதிகள் எங்கள் சங்கத்தின் தற்போதைய நடைமுறையில் உள்ள சங்க துனை விதிகள் என்றாலும், எற்கனவே நான் தாக்கல் செய்துள்ள சங்க துனை விதிகள் சங்கத்தின் முந்தையா துனை விதிகள் என்றாலும் சரிதான். பழைய துனை விதிகளில் பெருமளிவில் செய்யப்பட்ட சீர்திருத்த்தை உள்ளடக்கிய புதிய துனை விதிகள் தான் நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.20 என்றால் சரிதான். மேற்படி துனை விதிகள் சீர்திருத்தம் சம்பந்தமாக பொதுக்குழுவில் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்மாணம் என்பது

பொதுக்குழுவில் கலந்து கொண்ட நபர்களில் 2/3 உறுப்பினர்கள் கையெழுத்து செய்து நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த பொதுக்குழுவில் தீர்மாணத்தில் கையெழுத்து செய்த நபர்கள் பொதுக்குழுவில் கலந்து கொண்டவர்களில் 2/3 என்பது வருகை பதிவேட்டை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அந்த வருகை பதிவேட்டை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.20 சங்க துனை விதிகள் சட்டத்திற்கு புறம்பாக சீர்திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.